# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 185/மா/2019**

**நாள் : 20.06.2023**

திரு.G. கார்த்திகேயன்,
ஆவடி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி – எதிர்மனுதாரர்

சென்னை, ஆவடி, T.N.H.B, பிளாட் எண்.1969 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.கார்த்திகேயன் என்பவரின் 09.11.2019 நாளிட்ட மனு 12.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 185/மா/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, ஆவடி, T.N.H.B, பிளாட் எண்.1969 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.கார்த்திகேயன் தனது 09.11.2019 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" ஆவடி பெருநகராட்சி (தற்போது மாநகராட்சி), 18வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு செக்டார் 1–ல், 2011–2016 கால கட்டத்தில் மேத்யூ என்ற ஒப்பந்ததாரரால் ரூ.35,00,000/––ல் பூங்காவிற்கு மதில் சுவர் வாயில் வளைவுகள், வாயில் கதவுகள், இரு ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டது. அவர் அமைத்த ஆழ்துளை கிணறுகள், அமைத்தது முதலே செயல்படவில்லை. மேலும், மதில் சுவர் அஸ்திவாரம் இல்லாமல் கட்டப்பட்டுள்ளதால், வெளியில் இருந்தும், ஏரியில் இருந்தும் வரும் மழைநீர், கழிவு நீர் பூங்காவிற்குள் தேங்கி துர்நாற்றம் வீசுவதுடன் பொது சுகாதாரகேட்டை ஏற்படுத்தி வருகிறது.

தற்போது 2016–2017ஆம் ஆண்டில் அதே பூங்காவை அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.63,00,000/–த்திற்கு பூங்கா அபிவிருத்தி பணி ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்ததாரரால் செய்யப்பட்டு கடந்த 10.12.2018ல் திறந்து வைக்கப்பட்டது. பூங்காவில் அமைக்கப்பட்ட செயற்கை நீரூற்றுகள் திறப்புவிழா நடந்த பின் மூடுவிழா செய்யப்பட்டது. திறப்புவிழா முடிந்து மேலும் ஆறே மாதத்தில் நடைபாதை இருபுறமும் செடிகள் வளர்ந்து மக்களுக்கு இடையூறாகவும், நடைபாதையில் ஒட்டப்பட்ட ஓடுகள் பெயர்ந்தும் வருகின்றன. மேலும் பூங்காவில் அமைக்கப்பட்ட சிலைகளும் சிதிலமடைந்த நிலையில் உள்ளன. CCTV camera செயல்பாட்டில் இல்லை. கழிப்பறையோ பொதுமக்களுக்கு திறந்து விடாமல் பூட்டப்பட்டுள்ளது. மேலும் நடைபாதை உயர்த்தி அமைக்க தேவைப்பட்ட

மண், வெளியில் இருந்து கொண்டு வராமல் பூங்காவில் இருந்து வெட்டி நிரப்பப்பட்டதால் பூங்காவின் தரை, பள்ளமாகிவிட்டது. ஆகவே, ஊஞ்சல், சறுக்கு மரம் போன்ற விளையாட்டு சாதனங்கள் அப்பள்ளத்திலேயே அமைக்கப்பட்டதால் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி அவை துருபிடித்து பயன்படுத்தமுடியாதபடியுள்ளது. மேலும் பூங்காவில் தேங்கியுள்ள நீர் வெளியேற எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இது குறித்து மாநகராட்சி ஆணையர், பொறியாளர் ஆகியோரை பலமுறை நேரில் சந்தித்து முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே ஜூலை 14ல் மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் ஆகஸ்ட் 31 ஆகிய தேதிகளில் வாட்ஸ் ஆப் முகநூல், மின்னஞ்சல் வாயிலாக இருவருக்கும் புகாரளித்தேன். அப்போது அவர்கள் பணி முடித்து ஓராண்டு முடியாததால் ஒப்பந்ததாரரை, பூங்காவை செப்பனிட செய்ய ஒப்பந்தப்படி வலியுறுத்தியுள்ளதாக கூறினர். மேலும், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து பூங்கா பராமரிப்பு பணிக்காக மாதம் பல்லாயிரக்கணக்கான (ரூ.30,000/– முதல் ரூ.40,000/–) ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒப்பந்தம் எடுத்தவர் (வேறொரு நபர் பெயரில்) எந்த பணியையும் செய்யவில்லை.

ஆகவே இதுகுறித்து எங்கள் 'சட்ட கேடயம்' அக்டோபர் மாத இதழில் எழுதி அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்கப்பட்டும் நடவடிக்கை இல்லாததால் மீண்டும் அதிகாரிகளுக்கு செப்டம்பர் 16ல் வாட்ஸ்ஆப் மூலமாக 'e' நோட்டீஸ் அனுப்பினேன். அதன்பிறகும் நடவடிக்கை இல்லை. எனவே 14.10.2019ல் தங்களது மின்னஞ்சலில் புகாரளித்தேன். அதற்கு உடனடியாக பதிலளித்தமைக்கு மனமார்ந்த நன்றிகள். தங்கள் கடித எண். 1313/மா/2019 நாள் 22.10.2019 அறிவுறுத்தல்படி இப்புகாரினை பணிந்து சமர்ப்பிக்கின்றேன். தாங்கள் உரிய விசாரணை செய்வதுடன் நேரில் கள ஆய்வு செய்யவும், அதன்பேரில் தவறிழைத்தது யாராயிருந்தாலும் அவர்கள் மீது பொதுமக்களுக்கு இன்னலையும், வரி பணத்தையும் வீணடித்தமைக்காகவும் தக்க தண்டனை வழங்குவதோடல்லாமல், பாழ்பட்டுள்ள பூங்காவை சீரமைத்து தர உத்தரவிட கோருகிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 18/11/2019 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.** பதில் பெறப்படாதநிலையில், இந்நேர்வில் மனுதாரரின் மனு மீது 02.01.2020அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் மனுதாரர் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்தார்.

" 09.11.2019 நாளிட்ட புகார் மனு என்னால் அனுப்பப்பட்டது. அதில் ஆவடி மாநகராட்சி 18வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு செக்டர் 1ல் 2011 –2016 காலகட்டத்தில் மேத்யூ என்ற ஒப்பந்ததாரரால் ரூ.35 லட்சத்தில் மதில் சுவர் வாயில்கதவுகள், இரு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது. ஆனால் அமைத்தது முதலே செயல்படவில்லை. மதில் சுவர் அஸ்திவாரம் இல்லாமல் கட்டப்பட்டதால் வெளியில் இருந்தும் ஏரியிலிருந்தும் மழைநீர் மற்றும் கழிவு நீர் வந்து பூங்காவிற்குள் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. தற்போது 2016–2017 ஆம் ஆண்டில் அமிருத்து திட்டத்தின் கீழ் Jaisree Construction என்ற ஒப்பந்ததாரர் பூங்காவை அபிவிருத்தி பணி ரூ.63 இலட்சத்திற்கு செய்யப்பட்டு 10.12.2018ல் திறந்து வைக்கப்பட்டது.

அ) திறந்தது முதல் செயற்கை நீரூற்றுகள் செயல்படவில்லை.
ஆ)நடைபாதை ஓடுகள் உடைந்து சிதிலமடைந்துள்ளன.
இ)பொம்மைகள் உடைந்துள்ளன.
ஈ)நடைபாதையை உயர்த்தி அமைக்க பூங்காவிலேயே தோண்டி எடுக்கப்பட்டதால் மழைநீர் தேங்கி விளையாட்டு சாதனங்கள் (சிறுவர்களுக்கான) மழைநீர், கழிவு நீரால் பாதிக்கப்பட்டுள்ளன.
உ)CCTV கேமிராவும் பயன்பாட்டில் இல்லை.

பணி அனைத்தும் தரமற்ற நிலையில் செய்யப்பட்டு கழிப்பறை பொது மக்களுக்கு திறந்து விடப்படாமல் பூட்டப்பட்டு விட்டது. விளையாட்டு பொருள்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இது குறித்து பலதடவை நேரில் சென்று முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பராமரிப்பு பணிக்காக மாதம் ரூ.30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை செலவு செய்யப்பட்டு வருகிறது. ஒப்பந்தம் எடுத்தவர் வேறு ஒரு நபர் பெயரில் எடுத்துள்ளார். அவர் பெயர் எனக்கு சரியாக தெரியவில்லை. எனவே இதுபோன்ற பொது மக்களுக்கு இன்னல் விளைவிக்கும் பொருட்டு வரி பணத்தை வீணாக்கிய நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் பூங்காவை சீர் அமைத்து தர உரிய ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்போது மாநகராட்சி பொறியாளராக உள்ள திரு.வைத்தியலிங்கம் என்பவரிடம் இதுகுறித்து என்னால் நேரடியாக பலமுறை கேட்கப்பட்டது. ஆணையாளரிடமும் முறையிட்டுள்ளேன். நான் "சட்ட கேடயம்" என்னும் மாத இதழ் நடத்தி வருகிறேன். அதில் நான் பொறுப்பு ஆசிரியராக இருக்கிறேன். 1000 பிரதிகள் விற்கப்படுகிறது. அதில் லாபம் இல்லை. எனவே மேலே குறிப்பிட்ட எனது குற்றச்சாட்டுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் ஆஜராகி தனக்கு விசாரணைக்கான அழைப்பாணை எதுவும் வரவில்லை எனவும் மாநகராட்சி பொறியாளர் உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராக சென்றதால் தன்னை 02.01.2020 அன்றைய விசாணைக்கு ஆஜராகச் சொன்னார் எனவும் அதனால் ஆஜரானேன் என தெரிவித்துள்ள நிலையில் மனு குறித்து எந்தவித அறிக்கையோ, வாக்குமூலமோ அவர் அளிக்கவில்லை. அறிக்கை சமர்ப்பிக்கப்படாததால் ஆவடி மாநகராட்சி ஆணையரை அறிக்கை அனுப்புவதுடன் மனுவில் குறிப்பிட்ட காலத்தில் பணிபுரிந்த ஆணையர்கள், பொறியாளர்கள் பெயர்கள் மற்றும் அவர்கள் பணிபுரிந்த காலம், அவர்கள் தற்பொழுது பணிபுரியும் அலுவலகம் மற்றும் மேற்படி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரம் ஆகிய விவரங்களை அனுப்பி வைக்கவும் கோரப்பட்டார்.

ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 20.01.2020 நாளிட்ட கடிதத்தில் 2011–2012 முதல் 2016–2017 வரை பணிபுரிந்து ஆணையர்கள் விவரம் மற்றும் பொறியாளர்கள் விவரங்களை அனுப்பியுள்ளார். அதுசமயம்கூட மனுதாரர் மனு தொடர்பான விரிவான அறிக்கையை மாநகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்திறகு சமர்ப்பிக்கவில்லை.

மேற்காணும் சூழ்நிலையில் இந்நேர்வில் மறு விசாரணைக்கு மீண்டும் 08.06.2023 அன்று நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு 22.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. அவ்வமயம் எதிர்மனுதாரரை மேற்கண்ட மனு மீதானவிரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு கோரப்பட்டது.

08.06.2023 அன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. ஆவடி மாநகராட்சியின் இளநிலை பொறியாளர் 08.06.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" ஆவடி மாநகராட்சி வார்டு எண்.41 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு செக்டார் 1ல் உள்ள பூங்கா அபிவிருத்திப் பணிகள் ரூபாய் 63.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. 2020 மார்ச் மாதத்தில் கொரானா பெருந்தொற்று காரணமாக மேற்கண்ட பூங்கா மூடப்பட்டதால், அங்கு செடிகள் முளைத்து புதர் மண்டியிருந்தது. மண்டியிருந்த புதர்கள் அகற்றப்பட்டு மேற்கண்ட பூங்கா பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் சிறார்களுக்கான ஊஞ்சல், சறுக்கு மரம் மற்றும் அங்குள்ள விளையாட்டுப்பொருட்கள் புதுப்பிக்கப்பட்டு குழந்தைகளின் பயன்பாட்டில் உள்ளன.

மேற்கண்ட பூங்காவில் உள்ள 4 கழிப்பிடங்களின் கதவுகள் பழுதடைந்த நிலையில், மேற்கண்ட பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் அங்குள்ள நீரூற்றும் கொரோனா காலத்தில் உடைப்பட்டிருந்த நிலையிலும், அங்கிருந்த 2 CCTV காமிராக்களும் பழுதடைந்த நிலையில்,அவற்றையும் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட இப்பணிகள் இன்னும் ஒரு மாத காலத்தில் முடிவடையும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 06.06.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 06.06.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.18, புதிய வார்டு எண்.41ல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதியில் உள்ள பூங்காவிற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முகப்பு பகுதியில் பொதுமக்கள் உள்ளே சென்று வருவதற்கு இரண்டு பெரிய கதவுகள் அமைக்கப்பட்டு மற்றும் குடிநீருக்காக ஆழ்துளை கிணறு அமைத்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், மதில் சுவர் அஸ்திவாரம் அமைத்து நல்ல நிலையில் உள்ளது. மழைகாலங்களில் ஏரியின் கொள்ளவு எட்டியதும் மழைநீர் ஏரியில் இருந்து பொதுப்பணித்துறை மூலம் அமைக்கப்பட்ட சுற்றுச்சுவர் பகுதியில் 6 இடங்களில் விளிஞ்சியம்பாக்கம் ஏரியில் இருந்து வரும் உபரி நீர் பருத்திப்பட்டு ஏரிக்கு செல்லும் வகையில் மற்றும் பருத்திப்பட்டு ஏரியின் முழு கொள்ளவு எட்டியவுடன் மழைநீர் ஏரிக்கு செல்லாமல் ஏரி ஒட்டியுள்ள பகுதியான பாதாள சாக்கடை திட்ட சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பூங்கா பகுதியில் பரவலாக மழைநீர் தேங்கிய நிலையில் உள்ளதை மாநகராட்சிக்கு சொந்தமான டீசல் மோட்டார் மூலம் அப்புறப்படுத்தி சுகாதாரக்கேடு ஏதும் ஏற்படாதவண்ணம் சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், ஆயில் பால்ஸ் மற்றும் கொசு மருந்து தெளித்தல் ஆகிய பணிகள் தினசரி மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 2016–2017ம் ஆண்டில் அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.63.00 இலட்சத்தில் ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் மூலம் பூங்கா அபிவிருத்தி பணிகள் செய்யப்பட்டு, 10.12.2018ல் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்த நிலையில், 24.03.2020 அன்று கோவிட் – 19 காரணமாக பூங்கா மூடப்பட்டது. இதன் காரணமாக பூங்காவில் தேவையற்ற செடிகள் முளைத்து முட்புதர்கள் போல் காணப்பட்டது. தற்பொழுது செடிகள் முட்புதர்கள் அகற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. நடைபாதை, மின்விளக்குகள் பராமரிப்பில் உள்ளது. மேலும், கழிப்பறைகளுக்கு மராமத்து பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், இப்பூங்காவினை பராமரிக்க 07.3.2019 அன்று திரு.கே.ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படாததால், அவருக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டு, பணியை இரத்து செய்து தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம்,ஆவடி மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 06.06.2023 நாளிட்ட அறிக்கை மற்றும் ஆவணங்கள், இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் மனுதாரர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

குடியிருப்பு செக்டர் 1ல் 2011–2016 காலகட்டத்தில் ரூ.35,00,000/–ம் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்டு மதில் சுவர் வாயில் கதவுகள் இரு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது என்றும் ஆனால் அக்கிணறுகள் செயல்படவில்லை என்றும், மதில் சுவர் சரியாக கட்டப்படாததால் வெளியில் இருந்தும் ஏரியிலிருந்தும் மழைநீர் மற்றும் கழிவுநீர் பூங்காவிற்குள் வந்து தேங்கி துர்நாற்றம் வீசுகிறது என்றும், 2016–2017 ஆம் ஆண்டில் அம்ரூத் திட்டத்தின் கீழ் மீண்டும் ரூ.63,00,000/– பூங்கா அபிவிருத்தி பணிக்கு ஒதுக்கப்பட்டது என்றும் திறந்தது முதல் செயற்கை நீரூற்றுகள் செயல்படவில்லை என்றும் நடைபாதை ஓடுகள் உடைந்து சிதிலமடைந்துள்ளன. சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மழைநீர், கழிவுநீரால் பாதிக்கப்பட்டுள்ளன, CCTV கேமிராவும் பயன்பாட்டில் இல்லை என்றும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

* ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.18, புதிய வார்டு எண்.41ல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதியில் உள்ள பூங்காவிற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முகப்பு பகுதியில் பொதுமக்கள் உள்ளே சென்று வருவதற்கு இரண்டு பெரிய கதவுகள் அமைக்கப்பட்டு மற்றும் குடிநீருக்காக ஆழ்துளை கிணறு அமைத்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது என்றும் 2011–2016 காலகட்டத்தில் மேத்பூ என்ற ஒப்பந்ததாரருக்கு ரூ.35 இலட்சத்தில் பூங்கா பணி வழங்கப்பட்டுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டில் அம்ரூத் திட்டத்தின் கீழ் Jaisree Construction என்ற ஒப்பந்ததாரருக்கு பூங்காவை அபிவிருத்தி பணி செய்ய ரூ.63 இலட்சம் பணிக்காக வழங்கப்பட்டு 10.12.2018ல் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது. பின்னர் 2020ல் கோவிட் 19 காரணமாக பூங்கா மூடப்பட்டுள்ளது. தற்பொழுது நடைபாதை, மின்விளக்குகள் சரி செய்யப்பட்டு பராமரிப்பில் உள்ளது என்றும் கழிப்பறைகளுக்கும் மராமத்து பணி மேற்கொள்ளப்பட உள்ளது. சிசிடிவி கேமராவினையும் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இன்னும் ஒரு மாதகாலத்தில் முடிவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் நீரூற்று கொரோனா காலகட்டத்தில் உடைபட்டிருந்த நிலையில் பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகின்றன என்றும் மண்டியிருந்த புதர்கள் அகற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. பூங்காவில் துருப்பிடித்த நிலையில் உள்ள ஊஞ்சல், சறுக்கு மரம், விளையாட்டு சாதனங்கள் தற்பொழுது புதுப்பிக்கப்பட்டு குழந்தைகள் விளையாடி வருகின்றார்கள். CCTV கேமரா மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது என்றும் பூங்காவிற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முகப்பு பகுதியில் பொதுமக்கள் உள்ளே சென்று வருவதற்கு இரண்டு பெரிய கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும் மதில் சுவர் அஸ்திவாரம் அமைத்து நல்லநிலையில் உள்ளது எனவும் மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பூங்காவிற்கு 2011–2016 காலகட்டத்தில் ரூ.35 இலட்சமும் 2016–2017 ஆம் ஆண்டு அதே பூங்காவின் அபிவிருத்தி பணிக்காக ரூ.63 இலட்சமும் செலவிடப்பட்டு 10.12.2018ல் திறந்து பின்னர் 2020ல் கொரோனா பெருந்தொற்று

காரணமாக மூடப்பட்டுள்ளது. முழு அடைப்பு என்கின்ற நிலையில் கழிப்பிடங்களின் கதவுகள், நீரூற்று உடைபட்டிருப்பது, சிசிடிவி கேமரா பழுதடைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் காவலாளி அறை இருப்பதிலிருந்து நிச்சயம் காவலாளி **(Watchman)** மாநகராட்சியால் நியமிக்கப்பட்டிருப்பார் என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு காவலாளி இருக்கும்பட்சத்தில் எவ்வாறு கழிப்பிட கதவுகள், சிறுவர் சிறுமியர் விளையாட்டு சாதனங்கள், நடைபாதை ஓடுகள் போன்ற பொருட்கள் உடைக்கப்பட்டிருக்க முடியும் என்பது தெரியவில்லை. மாநகராட்சியின் களப்பணியாளர்கள் சரிவர களப்பணியாற்றி இருக்கும்பட்சத்தில் இதுபோன்று நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்பதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. பல இலட்சம் ரூபாய் அப்பூங்காவின் பணிக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது அப்பூங்கா பராமரிப்பு பணிக்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்கின்ற விவரம் **(split up details)**மாநகராட்சியால் தெரிவிக்கப்படவில்லை.

மேற்கண்ட பணிகளை ஏற்கனவே ஒப்பந்தப்பணி செய்து வரும் ஒப்பந்ததாரரைக்கொண்டே, எந்தவித நிதியும் புதிதாக ஒதுக்கப்படாமல், சரியான முறையில் பழுதுகள் பார்த்து பொதுமக்கள் மற்றும் சிறுவர் சிறுமியர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவந்திருக்க வேண்டும். மேலும் ஆவடி மாநகராட்சி சமர்ப்பித்துள்ள புகைப்படத்திலிருந்து சிறுவர் சிறுமிகள் விளையாடும் பகுதி மண் கொண்டு நிரப்பாமல் அவர்கள் பாதுகாப்பாக விளையாட ஏதுவாக இல்லை என்று தெரிகிறது. ஆகவே தேவையான மணல் கொட்டப்பட்டு சிறுவர் சிறுமியர் பாதுகாப்பாக விளையாட பூங்கா மேலும் சரிப்படுத்த வேண்டியுள்ளதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்டுகிறது.

**2019**ல் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைகளை சரியான முறையில் முடித்திடாமல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர பல இலட்சங்களை செலவு செய்தபின்னரும், சரியாக இன்றளவும் பணிகள் முடிக்கப்படாதது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும் இத்தகைய புகார்களின் உண்மைத்தன்மையை ஆராயாமல் அதனை கண்டு கொள்ளாமல் மேலுள்ள அலுவலர்கள் அலட்சியமாக இருந்துள்ளதையும் இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. இந்த நிலைக்கு காரணமாக இருந்துள்ள சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர்கள், பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

It is very distressing to observe that a responsible Local Body Avadi Municipal Corporation has been negligent, lethargic and passive for a fairly long period of nearly 5 years since December, 2018 when the park was kept open for public access and use as lung space for the local citizens.

For example,

1) The artificial fountains are not working.
2) CCTV camera system has collapsed.
3) Jungle growth on the surface soil of the park is visible from the photos furnished by the Corporation during the enquiry.
4) There appears to be damages on the walking track pavements.
5) The toilets are in damaged condition due to lack of attention and maintenance.

The Corporation's argument that the park was kept closed during the outbreak of Corona in 2020 and hence damages, were caused to the properties of the Corporation is subject to the following queries.

a) There is a system of watch and ward arrangement for parks to safeguard the Corporation assets. What was done in this case?

The Corporation has no answer for this, Why was not the agency entrusted with the upkeep of the park not pulled up and penalty/damages not collected has not been answered by the Corporation authorities? An amount of Rs.63 lakhs has been spent on this park under Amruth programme as per the report of the Local Body.

Hence the Director of Local Fund Audit is directed to scrutinize the records of tender adopted in this case during the financial year when the Local Body issued work orders and verify whether the previous contractor could be asked to attend to the rectification of the damages free of additional expenditure. It should be also verified whether any security deposit of the contractor could be forfeited within the scope of the terms and conditions of the Tender. A report in this regard may be sent to this office within the next 45 days.

The DMA is directed to initiate necessary disciplinary action against the field officials concerned in the matter who defaulted in supervising the park and its maintenance that includes the appropriate upkeep of the artificial fountains, toilets, bore wells, functioning of CCTV cameras, walking track fitness, play system for children like slopes, swings, seesaw etc. A detailed circular may be sent to all Commissioners of Corporations and Municipalities on the subject of park upkeep by way of reiteration of the existing instructions to ensure that our parks continue to be effective lung space for all citizens, welcome walking pavements, children-friendly, besides entities of greenery and visual delight.

2023–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. G.கார்த்திகேயன்,
   பிளாட் நெ.1969, T.N.H.B.
   ஆவடி,
   சென்னை – 600 054.
2. ஆணையர்,
   ஆவடி மாநகராட்சி,
   ஆவடி.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
   நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச்செயலகம்,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை – 600 009.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா.அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

5. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்,
   571, அண்ணா சாலை,
   நந்தனம்,
   சென்னை– 600035.

6. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா.அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்